**நவம்பர் – 08**

# TNPSC துளிகள்

- "The Last Day" எனும் புகழ்பெற்ற லிதுவேனிய புதினத்தின் இந்தி மொழி பெயர்ப்பை சாகித்ய அகாடமி புது டெல்லியில் வெளியிட்டது.
  - இந்தப் புதினத்தினை லிதுவேனிய-உக்ரைனிய எழுத்தாளர் ஜரோஸ்லாவாஸ் மெல்னிகாஸ் எழுதியுள்ளார்.
- தஜிகிஸ்தானுடனான இருதரப்பு ஒப்பந்தம் ஆனது சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு காலாவதியானதையடுத்து, தஜிகிஸ்தானில் உள்ள அய்னி விமானப் படைத் தளத்தில் இந்தியா தனது இராணுவ இருப்பை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.
- தொலைதூர மற்றும் பின்தங்கியப் பகுதிகளில் செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைய சேவையினை வழங்க ஸ்டார்லிங் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்த முதல் இந்திய மாநிலமாக மகாராஷ்டிரா மாநிலம் திகழ்கிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## வேலூரில் சிறிய TIDEL பூங்கா




- வேலூரில் உள்ள அப்துல்லாபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள முதல் சிறிய TIDEL தொழில்நுட்பப் பூங்காவை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, கரூர் மற்றும் சேலம் போன்ற இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் இத்தகைய மையங்களை நிறுவுவதற்கான மாநில அரசின் முன்னெடுப்பின் ஒரு பகுதியாக இந்தப் பூங்கா உள்ளது.
- தமிழ்நாடு முழுவதும் தகவல் தொழில்நுட்ப (IT) உள்கட்டமைப்பை விரிவுபடுத்தச் செய்வதற்காக திருவண்ணாமலை, திருப்போரூர் மற்றும் காரைக்குடியில் இதே போன்ற சிறிய TIDEL தொழில்நுட்பப் பூங்காக்கள் கட்டமைக்கப்பட்டு வருகின்றன.
- தற்போது, சேலம், தஞ்சாவூர், விழுப்புரம் மற்றும் ஆவடி அருகே உள்ள பட்டாபிராமில் சிறிய TIDEL தொழில்நுட்பப் பூங்காக்கள் செயல்பட்டு வருகின்றன, அதே நேரத்தில் கன்னியாகுமரி, திருப்பூர், விருதுநகர், ஓசூர் மற்றும் நாகப்பட்டினத்தில் புதிய சிறிய

TIDEL தொழில்நுட்பப் பூங்காக்கள் கட்டமைக்கப்பட்டு வருகின்றன.

## திருவண்ணாமலையில் விஜயநகர கால தங்க நாணயங்கள்

- திருவண்ணாமலை மாவட்டம் கோவிலூரில் உள்ள ஒரு சிவன் கோவிலில் மொத்தம் 103 முத்திரையிடப்பட்ட தங்க நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன.
- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்த நாணயங்கள் சுமார் 600 ஆண்டுகள் பழமையானவை என்றும், விஜயநகர காலத்தைச் சேர்ந்தவை என்றும் மதிப்பிடுகின்றனர்.
- இந்த நாணயங்களில் விஜயநகர ஆட்சியாளர்களால் பயன்படுத்தப்பட்ட ஒரு சின்னமான பன்றியின் சின்னம் உள்ளது.
- விஜயநகரப் பேரரசு ஆனது 1336 முதல் 17 ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் பரவி இருந்தது.



## தமிழ்நாட்டில் செயற்கை மழை பரிசோதனைகள்

- இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) மற்றும் மாநில அரசு இடையேயான கலந்துரையாடல்களின் கீழ் 1970 ஆம் ஆண்டில் தமிழ்நாடு செயற்கை மழை உருவாக்கம் (மேக விதைப்பு) குறித்து ஆராயத் தொடங்கியது.
- முதல் சோதனைகள் ஆனது, 1973 ஆம் ஆண்டில் திருவள்ளூரில் இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம் (IITM) மூலம் நடத்தப்பட்டன, ஆனால் எந்த உறுதியான முடிவுகளும் எட்டப்படவில்லை.
- 1975 ஆம் ஆண்டில், ஒரு கனடா நாட்டு நிறுவனம் ஆனது சென்னை மற்றும் நீலகிரிகளில் 12 லட்சம் செலவில் மேக விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதோடு இதில் மழைப்பொழிவில் சுமார் 20% அதிகரிப்பைப் பதிவு செய்தது.
- 1983 ஆம் ஆண்டில், தாமஸ் ஹென்டர்சன் தலைமையிலான ஓர் அமெரிக்கக் குழுவால் 26 லட்சம் ரூபாய் செலவில் மற்றொரு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்ற நிலையில் அதைத் தொடர்ந்து 1984 ஆம் ஆண்டில் மேலும் பல சோதனைகள் மேற்கொள்ளப் பட்டன.
- மேக விதைப்புக்காக மாநில அரசு 1983 ஆம் ஆண்டில் ஒரு விமானத்தை வாங்கியது.
- 1993 ஆம் ஆண்டில், புதிய சோதனைகள் நடத்தப்பட்டன ஆனால் மழைப்பொழிவு அதிகரிப்பு ஆனது இயல்பை விட 20 சதவீதத்திற்கும் மேலாக பதிவாகவில்லை என்று அறிவியலாளர்கள் முடிவு செய்தனர்.
- 2003 ஆம் ஆண்டில் முதல்வர் ஜெ. ஜெயலலிதாவின் ஆட்சியில் அறிவிக்கப்பட்ட பல பிந்தையத் திட்டங்கள் பொருத்தமற்ற வானிலையின் காரணமாக செயல்படுத்தப்பட

வில்லை.

- கிருஷ்ணா நீர், வீராணம் ஏரி மற்றும் உப்பு நீக்கும் ஆலைகள் சேர்க்கப்பட்டதன் மூலம், தமிழ்நாடு செயற்கை மழையைச் சார்ந்திருப்பது என்பது சமீபத்திய ஆண்டுகளில் தேவையற்றதாகி விட்டது.




# தேசியச் செய்திகள்

## சட்டப் பூர்வ அளவியல் திருத்த விதிகள், 2025

- நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் நுகர்வோர் விவகாரத் துறையானது, 2025 ஆம் ஆண்டு சட்டப் பூர்வ அளவியல் (பொதி கட்டப்பட்ட பொருட்கள்) திருத்த விதிகளை 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதியன்று அறிவித்தது.
- இந்தத் திருத்தம் மருத்துவ சாதனங்களைக் கொண்ட பொதிகளுக்கான 2011 ஆம் ஆண்டு சட்டப் பூர்வ அளவியல் (பொதி கட்டப்பட்ட பொருட்கள்) விதிகளை 2017 ஆம் ஆண்டு மருத்துவச் சாதன விதிகளுடன் இணைக்கிறது.
- மருத்துவச் சாதனப் பொதிகளுக்கு, எண்கள் மற்றும் எழுத்துக்களின் எழுத்துரு உயரம் மற்றும் அகலம் ஆனது 2017 ஆம் ஆண்டு மருத்துவ சாதன விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்று விதிகள் குறிப்பிடுகின்றன.
- மருத்துவ சாதனப் பொதிகளில் உள்ள அறிவிப்புகள் சட்டப் பூர்வ அளவியலின் கீழ் முதன்மை காட்சிப் பலகைத் தேவைகளுக்குப் பதிலாக மருத்துவச் சாதன விதிகளின் படி உருவாக்கப்படலாம்.
- நுகர்வோர் பாதுகாப்பை வலுப்படுத்தவும் ஒழுங்குமுறை சார்ந்த குழப்பத்தைக்

குறைக்கவும் மருத்துவ சாதனங்களுக்கான ஒற்றை, தெளிவான மற்றும் நிலையான முத்திரையிடல் தரநிலையை இந்தத் திருத்தம் உறுதி செய்கிறது.

**Department of Consumer Affairs Notifies Legal Metrology (Packaged Commodities) Amendment Rules, 2025**

Harmonisation with Medical Device Rules to Benefit Consumers, Industries and Regulators

Clear Declarations – Stronger Consumer Confidence

Aligned Standards for a Healthier India

Towards a Transparent and Healthy India

## கடற்படைத் தளபதிகள் மாநாடு 2025



- ஆண்டிற்கு இரண்டு முறை நடைபெறும் 2025 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது கடற்படைத் தளபதிகள் மாநாடானது புது டெல்லியின் நௌசேனா பவனில் நடைபெற்றது.
- செயல்பாட்டுத் தயார்நிலை, கடல்சார் பாதுகாப்பு, திறன் மேம்பாடு மற்றும் முப்படை ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் இந்த மாநாடு கவனம் செலுத்தியது.
- கடற்படை ஆயுதச் சேவைக்கான விதிமுறைகள், அரசாங்க இணையச் சந்தை (GeM) குறிப்பேடு மற்றும் வெளிநாட்டு ஒத்துழைப்புச் செயல் திட்டம் உட்பட ஐந்து கடற்படை அறிக்கை வெளியீடுகள் இதில் வெளியிடப்பட்டன.
- கடற்படை ஆராய்ச்சி மற்றும் அறிவுசார் பணிகளின் தொகுப்பாக ஒருங்கிணைந்த அறிவுத் திறனுக்கான கடற்படை அறிவுசார் வலை தளமும் (NIPUN) தொடங்கப்பட்டது.
- சாகர் மாந்தன் நிகழ்வு ஆனது சமகால கடல்சார் மற்றும் பாதுகாப்பு துறை பிரச்சினைகள் குறித்து விவாதித்தது.

## இந்தியாவின் கடற்படைப் பயிற்சி 2026

- 2026 ஆம் ஆண்டில் சர்வதேச கடற்படை ஆய்விலிருந்து சீனா மற்றும் துருக்கியை இந்தியா விலக்கியுள்ளது.

- 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தியா-பாகிஸ்தான் மோதலின் போது பாகிஸ்தானுக்கு அந்நாடு ஆதரவளித்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 முதல் 25 ஆம் தேதி வரை விசாகப்பட்டினத்தில் நடைபெறும் பயிற்சிகளில் அமெரிக்கா மற்றும் ரஷ்யா உட்பட 55 நாடுகள் பங்கேற்கும்.




# பொருளாதாரச் செய்திகள்

## 2025 ஆம் நிதியாண்டில் அந்நிய நேரடி முதலீடுகள்





- 2024-25 ஆம் நிதியாண்டில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட அந்நிய நேரடி முதலீட்டில்

(FDI) அமெரிக்காவும் சிங்கப்பூரும் இணைந்து மூன்றில் ஒரு பங்கு முதலீட்டினை பங்களித்தன.

- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், பதிவு செய்த 45,702 நிறுவனங்களில், 41,517 நிறுவனங்கள் அந்நிய நேரடி முதலீடு அல்லது வெளிநாட்டு நேரடி முதலீட்டை (ODI) பதிவு செய்தன.
- அந்நிய நேரடி முதலீட்டைப் பெறும் நிறுவனங்களில் நான்கில் மூன்று பங்கு 50 சதவீதத்திற்கும் அதிகமான பங்குகளை வைத்திருக்கும் வெளிநாட்டு நிறுவனங்களின் துணை நிறுவனங்களாகும்.
- 2024-25 ஆம் ஆண்டில் மொத்த அந்நிய நேரடி முதலீடு 68,75,931 கோடி ரூபாயாக இருந்தது என்பதோடு இதில் அமெரிக்கா 20% மற்றும் சிங்கப்பூர் 14.3% பங்களித்தது.
- சந்தை மதிப்பின் அடிப்படையில் உற்பத்தித் துறை 48.4% என்ற மிகப்பெரிய அந்நிய நேரடி முதலீட்டைப் பெற்றது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து சேவைகள் துறை பெற்றது.
- 97 சதவீதத்திற்கும் மேற்பட்ட FDI பெறும் நிறுவனங்கள் பட்டியலிடப்படாதவை என்பதோடு அவை நிதி சாரா நிறுவனங்கள் ஆகும் என்ற நிலையில் அவை முக மதிப்பிலான 90.5% பங்குகளை வைத்திருந்தன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## அருகிலுள்ள அண்டத்தில் உயரின உருவாக்கத் தொகுதிகள்




- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியைப் (JWST) பயன்படுத்தி, வானியலாளர்கள் மெத்தனால், அசிடால்டிஹைட், எத்தனால், மெத்தில் ஃபார்மேட் மற்றும் அசிட்டிக் அமிலம் என்கின்ற ஐந்து சிக்கலான கரிம மூலக்கூறுகளைக் கண்டறிந்தனர்.
- இந்த மூலக்கூறுகள் 160,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள பெரிய சீரற்ற பெரு விண்மீன் திரளில் (LMC) ST6 எனப்படும் ஒரு நட்சத்திர உருவாக்கத்திற்கு முந்தைய நிலையிலான ஒன்றை (புரோட்டோஸ்டார்) சுற்றி காணப்பட்டன.
- மெத்தனால் முன்னர் அங்கு கண்டறியப்பட்ட அதே வேளையில், முதன்முறையாக விண்வெளியில் அசிட்டிக் அமிலம் கண்டறியப்பட்டது.

- RNA மூலக்கூறின் சர்க்கரை மூலக்கூறு முன்னோடியான கிளைகோல்டிஹைட்டின் தற்காலிக அறிகுறிகளும் அங்கு காணப்பட்டன.
- LMC திரளின் உலோகங்கள் செறிவு குறைந்த சூழல் ஆனது, தூசி துகள்கள் சில கனமான கூறுகளுடன் கூட சிக்கலான வேதியியல் செயல்முறையைத் தூண்டக் கூடும் என்பதை வெளிப்படுத்தி, ஆரம்பகால பேரண்ட சூழல்களைப் பிரதிபலிக்கிறது.
- இந்தக் கண்டுபிடிப்புகள் ஆரம்பகால பேரண்டத்தில் உயிரினங்களின் உருவாக்கத் தொகுதிகள் எவ்வாறு உருவாகியிருக்கலாம் என்பதற்கான நுண்ணறிவுகளை வழங்குகின்றன.

## சூப்பர் எர்த் - GJ 251 c





- வானியலாளர்கள் GJ 251 c என்ற பூமியை விட கிட்டத்தட்ட 4 மடங்கு நிறை கொண்ட ஒரு பாறைப்பாங்கான வெளிப்புறக் கோளினை கண்டறிந்துள்ளனர் என்ற நிலையில் இது 20 ஒளி ஆண்டுகளுக்கும் குறைவான தொலைவில் அமைந்த அருகிலுள்ள குள்ள நட்சத்திரத்தைச் சுற்றி வருகிறது.
- இந்தக் கிரகமானது, உயிரினங்கள் வாழக்கூடிய சூழல் கொண்ட, சரியான வளி மண்டலம் இருந்தால் திரவ நீர் இருக்கக் கூடிய "கோல்டிலாக்ஸ்" என்ற மண்டலத்தில் அமைந்துள்ளது.
- 20 ஆண்டுகளுக்கும் மேலான தரவுகளைப் பகுப்பாய்வு செய்து, வாழக் கூடிய மண்டல கிரக கண்டுபிடிப்பான் (HPF) கருவியைப் பயன்படுத்தி இந்தக் கண்டுபிடிப்பு கண்டறியப் பட்டது.
- இந்தக் கிரகத்தின் ஈர்ப்பு விசையால் ஏற்படும் அதன் ஓம்பு நட்சத்திரத்தின் "திசை பிறழ்வினை" கவனிப்பதன் மூலம் ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கிரகத்தைக் கண்டு அறிந்தனர்.

## விண்மீன் மண்டல வால் நட்சத்திரம் 3I/ATLAS

- 3I/ATLAS எனும் விண்மீன் மண்டல வால் நட்சத்திரமானது, சூரியனை விட்டு விலகி பூமியை நோக்கி நகரும் போது எதிர்பாராத விதமாக அதன் வேகம் முடுக்குவிக்கப் படுகிறது.
- அது அதன் பெரிஹேலியன் நிலையில் (சூரியனுக்கு மிக அருகில்) கணிசமான நிறை இழந்து, ஈர்ப்பு விசையற்ற முடுக்கத்தை ஏற்படுத்தியதாக அவதானிப்புகள் தெரிவிக்கின்றன.

- அதன் வேகம் 130,000 மைல் வேகத்தில் இருந்து சுமார் 152,000 மைல் வேகத்தில் அதிகரித்தது.
- சூரியனின் ஈர்ப்பு விசையால் அதன் முடுக்கத்தை முழுமையாக விளக்க முடியாது.
- பெரிஹேலியன் நிலைக்கு அருகில் மதிப்பிடப்பட்ட நிறை இழப்பு 13 சதவீதத்திற்கும் அதிகமாகும்.
- வால் நட்சத்திரம் ஆனது பூமிக்கு மிக அருகில் என்ற நிலையில் இருந்து ஆறு வாரங்கள் தொலைவில் உள்ளது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## சிற்றாமைகள் பாதுகாப்பு

- ஒடிசாவின் கேந்திரபாடாவில் உள்ள கஹிர்மாதா கடல் சார் சரணாலயத்தில் நவம்பர் 01 முதல் மே 31 ஆம் தேதி வரை 7 மாத கால மீன்பிடி தடை அமலில் உள்ளது.
- அருகி வரும் சிற்றாமைகள்/ஆலிவ் ரெட்லி கடல் ஆமைகளை அவற்றின் இனச் சேர்க்கை மற்றும் கூடு கட்டும் காலத்தில் பாதுகாப்பதே இந்தத் தடையின் நோக்கம் ஆகும்.
- இந்த ஆமைகள் நவம்பர் மாதத்தில் இங்கு வந்து சேரும் என்ற நிலையில் இங்கு பெண் ஆமைகள் மார்ச் மாதத்தில் முட்டையிடும்.
- வனத்துறையானது பதினான்கு ஆமை பாதுகாப்பு முகாம்களை அமைத்துள்ளது என்ற

நிலையில் இதில் மதலி, சசனிபாடா, எகாகுலா மற்றும் பாபுபாலி தீவுகளில் உள்ள நான்கு கடல் சார் முகாம்கள் அடங்கும்.

❖ இந்தச் சரணாலயமானது ஹுகிடோலாவிலிருந்து தம்ரா வரை 1,435 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது என்பதோடு இங்கு கடற்கரையிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டருக்குள் மீன்பிடித்தல் என்பது தடை செய்யப் பட்டுள்ளது.

❖ 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 606,933 ஆமைகள் முட்டையிட்டன என்ற நிலையில் ஒடிசாவில் உலகின் ஆலிவ் ரெட்லி எண்ணிக்கையில் 50% மற்றும் இந்தியாவின் கடல் ஆமைகளில் 90% காணப்படுகின்றன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய சமத்துவமின்மை நெருக்கடி

❖ இந்தியாவின் செல்வந்தர்களான 1% பேர் 2000 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் தங்கள் செல்வத்தை 62% அதிகரித்துள்ளதாக G20 அறிக்கை தெரிவிக்கிறது.

❖ உலகளவில், முன்னணி 1% செல்வந்தர்கள் 2000 முதல் 2024 ஆம் ஆண்டு வரையில் உருவாக்கப் பட்ட அனைத்து புதிய செல்வங்களிலும் 41% வளத்தினைக் கைப்பற்றினர் அதே நேரத்தில் மனிதகுலத்தின் கீழ் நிலையில் உள்ள பாதி பேர் 1% வளத்தினை மட்டுமே பெற்றனர்.

❖ சீனா மற்றும் இந்தியா போன்ற அதிக மக்கள்தொகை கொண்ட சில நாடுகள், தனி நபர் வருமானத்தை அதிகரிப்பதன் காரணமாக நாடுகளுக்கு இடையேயான சமத்துவமின்மையைக் குறைத்துள்ளன.

❖ பாதிக்கும் மேற்பட்ட உலக நாடுகளில், 1% செல்வந்தர்கள் தங்கள் செல்வ வளத்தின் பங்கை அதிகரித்து, உலக மக்கள்தொகையில் 74% பேரை உள்ளடக்கியதாக உள்ளனர்.

❖ இந்தியாவில், மேல் நிலையில் உள்ள 1% பேர் தங்கள் செல்வ வளத்தின் பங்கை 62% அதிகரித்தனர், அதே நேரத்தில் சீனாவில் அது 54% வளர்ச்சியடைந்தது.

❖ அதிக சமத்துவமின்மை உள்ள நாடுகள் ஜனநாயக வீழ்ச்சியை எதிர்கொள்ளும்

வாய்ப்பு ஏழு மடங்கு அதிகமாகும்.

- 2020 ஆம் ஆண்டு முதல், உலகளாவிய வறுமைக் குறைப்பு குறைந்துள்ளது அல்லது தலைகீழாக மாறியுள்ளது.
- தற்போது, 2.3 பில்லியன் மக்கள் மிதமான அல்லது கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர்.
- உலக மக்கள்தொகையில் பாதி பேர் இன்னும் அத்தியாவசிய சுகாதார சேவைகளைப் பெறவில்லை என்பதோடு மேலும் 1.3 பில்லியன் மக்கள் தங்கள் கைப்பிடிப்பிலிருந்து (சேமிப்பினை) செலவழிக்கும் சுகாதாரச் செலவுகளால் வறிய நிலையில் உள்ளனர்.




# மாநிலச் செய்திகள்

## டெல்லி மேம்பாட்டு ஆணையத் திட்டங்கள்




- டெல்லி மேம்பாட்டு ஆணையம் (DDA) ஆனது, கிழக்கு டெல்லி மையத்தை குடியிருப்பு, வணிக மற்றும் குடிமை இடங்களை ஒருங்கிணைக்கும் கலப்பு பயன்பாட்டு நகர்ப்புற

மையமாக உருவாக்கி வருகிறது.

- கர்கர்டூமாவில் மேற்கொள்ளப்படும் டவரிங் ஹைட்ஸ் (Towering Heights) திட்டம் டெல்லியின் முதல் போக்குவரத்து சார்ந்த மேம்பாட்டு (TOD) வீட்டு வசதித் திட்டமாக இருக்கும்.
- வாகனப் பயன்பாடு மற்றும் பயண நேரத்தைக் குறைக்க பொதுப் போக்குவரத்து மையங்களைச் சுற்றி கட்டப்பட்ட பாதசாரிகளுக்கு ஏற்ற, கலப்பு-பயன்பாட்டு சுற்றுகளில் TOD கவனம் செலுத்துகிறது.
- 30 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள கிழக்கு டெல்லி மையம் 70% குடியிருப்பு, 20% வணிக மற்றும் 30% பசுமையான திறந்தவெளிகளைக் கொண்டுள்ளது.
- NH-1 மற்றும் நகர்ப்புற விரிவாக்க சாலை-II ஆகியவற்றை அணுகக் கூடிய 30.35 ஹெக்டேர் பரப்பளவில் நரேலாவில் ஒருங்கிணைந்த பல விளையாட்டு அரங்கத்தை அமைக்க DDA அங்கீகரித்தது.
- நரேலாவில் 4.33 ஹெக்டேர் பரப்பளவில், பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு கல்வி மையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.


## கடற்படை சௌர்யா அருங்காட்சியகம் - லக்னோ




- உத்தரப் பிரதேசமானது லக்னோவில் கடற்படை சௌர்யா அருங்காட்சியகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.
- வட இந்தியாவின் முதல் கடல்சார் பாரம்பரிய வளாகமாக CG நகரில் உள்ள ஏகானா அரங்கம் அருகே இந்த அருங்காட்சியகம் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த திட்டம் ஆனது 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இதில் F-21 கோதாவரி ரக போர்க்கப்பலுடன் INS கோமதி சௌர்யா ஸ்மாரக் மற்றும் TU-142 விமானம் மற்றும் சீ கிங் SK-42B ஹெலிகாப்டருடன் நௌசேனா சௌர்யா வாடிகா ஆகியவை இடம்பெற்றுள்ளன.

# முக்கிய தினங்கள்

## உலக சுனாமி விழிப்புணர்வு தினம் 2025 – நவம்பர் 05




- சுனாமி அபாயங்கள் மற்றும் முன் எச்சரிக்கை அமைப்புகள், தயார்நிலை மற்றும் சமூக மீள்தன்மை ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றிய உலகளாவிய விழிப்பு உணர்வை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த அனுசரிப்பு ஆனது 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் நிறுவப் பட்டது.
- சுனாமிகள் மிகவும் அரிதானவை என்றாலும், இவை மாபெரும் அழிவை ஏற்படுத்தும் என்பதோடு கடந்த நூற்றாண்டில் உலகளவில் 2.5 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் சுனாமியால் உயிரிழந்துள்ளனர்.
- நவம்பர் 05 ஆம் தேதியானது, ஒரு விவசாயி சுனாமி நெருங்கி வருவதைப் பற்றி எச்சரித்து கிராம மக்களைக் காப்பாற்றியதாகக் கூறப்படும் "இனாமுரா-நோ-ஹி" (The Burning of the Rice Sheaves-நெற்கதிர்களை எரித்தல்) என்ற ஒரு ஜப்பானியக் கதை மூலம் ஈர்க்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Be Tsunami Ready: Invest in Tsunami Preparedness" என்பதாகும்.

## போர் மற்றும் ஆயுத மோதலில் சுற்றுச்சூழல் சுரண்டுவதைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் 2025 - நவம்பர் 06

- ஆயுத மோதல்களின் போது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மற்றும் இராணுவ நன்மைக்காக அதைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பது குறித்து உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சுற்றுச்சூழல் ஆனது பெரும்பாலும் மாசுபட்ட நீர், அழிக்கப்பட்ட காடுகள் மற்றும் நச்சு கலந்த மண் ஆகியவற்றால், போரினால் அமைதியான முறையில் பாதிக்கப்பட்ட ஒன்றாக மாறுவதால் இத்தினம் அனுசரிக்கப் படுகிறது.
- UNEP அமைப்பின் படி, கடந்த 60 ஆண்டுகளில் சுமார் 40 சதவீத உள்நாட்டு மோதல்கள்

இயற்கை வளங்களைச் சுரண்டுவதோடு இணைக்கப்பட்டுள்ளன.




✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯